## களம் காணும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் 2-ஆம் கட்ட தேர்தல் பிரச்சாரம்!

## விருதுநகர் – திருமங்கலத்தில் இன்று உரையாற்றுகிறார்!

**தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரித்து வருகிறார்.**

**இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், இரண்டாம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 3ஆம் தேதி திருநெல்வேலியில் தொடங்கினார்.**

**இன்று காலை விருதுநகரிலும், மாலையில் திருமங்கலத்திலும் நடைபெறும் மாபெரும் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் கழகத் தலைவர் அவர்கள் உரையாற்றுகிறார்.**



### தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் சுற்றுப்பயண விவரம்

**05.04.2026 (ஞாயிற்றுக்கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| காலை 9 மணி | விருதுநகர் (பொதுக்கூட்டம்) | சாத்தூர், ராஜபாளையம், சிவகாசி, திருவில்லிபுத்தூர், திருச்சுழி, அருப்புக்கோட்டை, விருதுநகர் |
| மாலை 5 மணி | திருமங்கலம் (பொதுக்கூட்டம்) | மேலூர், மதுரை கிழக்கு, சோழவந்தான், மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மத்தி, மதுரை மேற்கு, திருப்பரங்குன்றம், திருமங்கலம், உசிலம்பட்டி |

**குறிப்பு :** கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18

---

### வேலூர் மாவட்டம் – பொன்னையில் கழக அரசின் திட்டங்கள் - சாதனைகளைக் கூறி

# அமைச்சர் - கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் வாக்கு சேகரிப்பு!

## மலர் தூவி - ஆரத்தி எடுத்து பெண்கள் வரவேற்பு!

**வேலூர், ஏப்.5-**

**வேலூர் மாவட்டம் பொன்னை பகுதியில் கழக அரசுசெய்த திட்டங்கள் சாதனைகள் குறித்து எடுத்துரைத்து காட்பாடி தொகுதி தி.மு.க. வேட்பாளர் கழக பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் வாக்கு சேகரித்தார்.**



அவருக்கு பூக்களைதூவியும் ஆரத்தி எடுத்தும் பெண்கள் வரவேற்பு கொடுத்தனர்.

வேலூர் மாவட்டம் காட்பாடி தொகுதியில் தி.மு.க. வேட்பாளராக கழகப் பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன் அவர்கள் மீண்டும் போட்டியிடுகிறார்.

அவர் காட்பாடி தொகுதிக்கு உட்பட்ட பொன்னை பகுதியில் அவுலரங்க பள்ளி, கோடலவாரி, பொன்னை பாலேகுப்பம் எஸ்.என்.பாளையம், பொன்னை புதூர் கீரை சாத்து தீயார்குப்பம், உள்ளிட்ட 9 ஊராட்சிகளுக்கு உட்பட்ட கிராமங்களுக்குச் சென்று தி.மு.க. ஆட்சியின் போது அவர் செய்த சாதனைகளை எடுத்துக் கூறி தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போது வழிநெடுகிலும் பெண்கள் பூக்களை தூவியும், ஆரத்தி எடுத்தும் அவரை வரவேற்றனர். பொன்னை அடுத்த கீரைசாத்து பகுதியில் இருந்த பெண்கள் அவரது வாகனத்தின் அருகே வந்து தங்கள் கிராமத்திற்கு கடந்த மூன்று மாதங்களாக ஆற்காட்டில் இருந்து லாலாபேட்டை, கீரை சாத்து வழியாக பொன்னை வரை செல்லும் அரசு பஸ் இயக்கப்படவில்லை. இப்போது மாணவ, மாணவிகளுக்கு முழு ஆண்டு தேர்வுகள் நடைபெற்று வருவதால் பள்ளிக்குச் செல்வதற்காக அவர்கள் சிரமப்படுவதாகவும் பஸ்சை இயக்க வேண்டும் எனவும் கோரிக்கை வைத்தனர்.

உடனடியாக போக்குவரத்து துறை அதிகாரிகளுக்கு தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு அந்த பஸ்சை இயக்கவேண்டும் என கேட்டுக் கொண்டார். பின்னர் நாளை முதலே இந்த பகுதிக்கு தொடர்ந்து பஸ் இயக்கப்படும் என பொதுமக்களிடம் வேட்பாளரும் அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் உறுதி அளித்தார்.

இதனைத் தொடர்ந்து கழக பொதுச் செயலாளர், வேட்பாளர் அமைச்சர் துரைமுருகன் பேசுகையில் 1970ல்பொன்னை ஆற்றின் குறுக்கே தரை பாலத்தை கட்டியவன் நான்தான் .அந்த பாலம் பல ஆண்டுகள் கடந்து பழுதான நிலையில் தற்போது ரூ.148 கோடியில் புதிய மேம் பாலத்தை கட்டி கொடுத்திருக்கிறேன். பொன்னை பகுதியில் அரசு மருத்துவமனையை கட்டிக் கொடுத்திருக்கிறேன். பொன்னையைச் சுற்றியுள்ள பல குக்கிரா மங்களுக்கு தார்ச் சாலை அமைத்துக் கொடுத்திருக்கிறேன். பஸ் வசதி இல்லாத கிராமங்களுக்கு பஸ் வசதி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறேன். கடந்த ஐந்து ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில் எண்ணற்ற திட்டங்களை பொதுமக்களுக்காக செய்துள்ளேன் என்று கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர் மகளிர் உரிமைத் தொகை, முதியோர் உரிமைத்தொகை புதுமைப்பெண் திட்டம், கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு லேப்டாப் வழங்கும் திட்டம், மகளிர்க்கு அரசு பஸ்களில் விடியல் பயணத்திட்டம் உள்பட தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை எடுத்துக் கூறிவாக்குச் சேகரித்தார்.

நிகழ்ச்சியில் வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர்ஆனந்த், ஒன்றிய குழுத் தலைவர் வேல்முருகன், ஒன்றிய தி.மு.க. செயலாளர்கள் சி. ரவி, கே. கருணாகரன் பொன்னை ஊராட்சி மன்ற தலைவர் ரமேஷ் வள்ளிமலை ஊராட்சி மன்ற தலைவர் வாசுகி, கோட்டீஸ்வரன், பெருமாள்குப்பம் ஊராட்சி மன்ற தலைவர்கோட்டி, எருக்கம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் கோமதி சுதாகர் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிடும் தா.மோ.அன்பரசன் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி முன்னிலையில் வேட்புமனு தாக்கல் செய்தார். அருகில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பீம்ராவ், காங்கிரஸ் மாவட்ட தலைவர் கே.வி.திலகர், தே.மு.தி.க. மாவட்டத் தலைவர் சூர்யா ஆகியோர் உள்ளனர்.





திருவெறும்பூர் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வேட்பாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்புமனுவை தாக்கல் செய்தார். உடன் துரை வைகோ எம்.பி., கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் ஏராளமானோர் பங்கேற்றனர்.